IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No.352/2007**

| DEPOSITION OF WITNESS | PW.4 |
|---|---|

| NAME | புருஷோத்தமன் |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 13.06.2023

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1.எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி முனிரத்தினம் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். நானும் நாயுடு இனத்தைச் சேர்ந்தவன் முனிரத்தினமும் நாயுடு இனத்தைச் சேர்ந்தவர்கள். இந்த வழக்கில் முதல் பிரதிவாதி தாமோதரன் சென்னையைச் சேர்ந்தவர் என்றால் சரிதான்.

2. 1ம் பிரதிவாதி தாமோதரன் தாவா சொத்தை சென்னையில் உள்ள DRT நீதிமன்றத்தின் மூலம் ஏலத்தில் எடுத்தார் என்றால். அதைப்பற்றி தெரியாது. இந்த வழக்கு முனிரத்தினம் நாயுடு சென்னையைச் சார்ந்த தாமோதிரனுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். தாமோதரன் தாவா சொத்தை ஏலத்தில் எடுப்பதற்கு முன்பே முனிரத்தினத்திற்கு சொந்தமானது என்றும் தான் தான் சுவாதீனத்தில் இருந்தார் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

3. வாதி முனிரத்தினம் கர்நாடகா மாநிலம் கே.ஜி.எப் அருகில் கங்காங்கபல்லி கிராமத்தில் தலைமுறையாக வசித்து வருகிறார். தாவா சொத்து முனிரத்தினம் வாங்குவதற்கு முன்பு சோமசுந்தரம் என்பவருக்கு சொந்தமான இடம். சோமசுந்தரம்ன எனென்பவர் தாவா சொத்தை அடமானம் வைத்து அதன் பின்பு தான் ஏலத்தில் எடுத்தாரா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. சோமசுந்தரமும், முனிரத்தினமும் உறவினர்கள் தான்.

4. சோமசுந்தரதிற்கும் முனிரத்தினத்திற்கும் எந்த வித தகராறும் எனக்கு தெரிந்து கிடையாது. சோமசுந்திரம் உயிருடன் தான் பெங்களுரில் உள்ளார். முனிரத்தினம் தாவா சொத்தை பராமறிக்கவில்லை என்றும், வேறு நபர்கள் பராமறிக்கிறார்க்ள என்று நான் முதல் விசாரணை வாக்கு மூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை. தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது.

5. இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும், வாதி முனிரத்தினம் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்கு மூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்து பொய்யானவை என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.Rajananhivarmasiva,
District Munsif,
Gudiyattam.